**BRAMPTON** **Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# குளிர்கால தட்பவெப்ப நிலையை எதிர்கொள்ள மேம்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுடன் பிராம்ப்டன் நகரம் தயாராகிறது

பிராம்ப்டன், ON (நவம்பர் 10, 2023) – குளிர்கால தட்பவெப்பநிலை நெருங்கி வருவதால், பிராம்ப்டன் நகரம் தனது வாகனங்கள் மற்றும் உபகரணங்களை தயார் நிலையில் வைத்துள்ளது; அத்துடன், இந்தக் காலநிலை பருவத்தில் சமூகத்தை 24 மணிநேரமும் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும் வகையில் புதிதாக மேம்படுத்தப்பட்ட நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்துகிறது.

**பனித்துகள் அகற்றுதலுக்கான நிதி உதவியை விரிவாக்குதல்**

பக்கவாட்டு நடைபாதைகள் மற்றும் டிரைவ்வே-க்களில் இருந்து பனியை அகற்ற ஒருவரை பணியமர்த்துவதற்கான செலவினை ஈடுகட்ட, முதியவர்கள் மற்றும் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு உதவ பிராம்ப்டன் நகரம் தனது நிதி உதவி திட்டத்தை விரிவுபடுத்துகிறது. இந்த ஆண்டு முதல், 'வீடுகளை வாடகைக்கு எடுப்பவர்களும்' இந்தத் திட்டத்திற்காக விண்ணப்பிக்கலாம். தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள் தெரு மூலைகளில் அமையாத சொத்துகளுக்கு $300 வரையிலும் அல்லது தெருமூலைகளில் அமைந்த சொத்துகளுக்கு $400 வரையிலும் மானியமாகப் பெறலாம்.

தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இங்கு மேலும் அதிகம் அறியலாம் மற்றும் விண்ணப்பிக்கலாம்: City of Brampton | Roads and Traffic | Snow Removal Financial Assistance.

**காலநிலைமாற்ற நிகழ்வுகளின்போது தெருக்களை பாதுகாப்பானதாகவும் எளிதில் அணுகும் வகையிலும் வைத்திருத்தல்**

தெருக்களில் வாகனங்களை நிறுத்துவது அனுமதிக்கப்படாது மற்றும் குளிர்கால வானிலை நிகழ்வுகளின் போது அமலாக்கப்படும். பனி வாரும் இயந்திரங்கள், உப்பு தெளிக்கும் எந்திரங்கள் மற்றும் அவசரகால வாகனங்கள் பாதுகாப்பாக கடந்து செல்ல ஏதுவாக வாகனங்கள் தெருக்களுக்கு அப்பால் நகர்த்தப்பட வேண்டும்.

வாகனம் நிறுத்துவதன் காரணமான அபராதங்களில் மாற்றங்கள்

குளிர்காலப் பனிப்புயல் நிகழ்வுகளின் போது, பனியை திறம்பட வாரி அகற்றும் நகரத்தின் திறனை, சாலைகளில் நிறுத்தப்படும் வாகனங்கள், தடுக்கின்றன. பனி அகற்றுதல் மற்றும்/அல்லது குளிர்காலப் பராமரிப்பில் குறுக்கிடும் வாகனங்களுக்கான அபராதத் தொகையை அதிகரிக்க, பிராம்ப்டன் நகரம் தனது நிர்வாக ரீதியான மானிட்டரி அபராத சிஸ்டம் (Administrative Monetary Penalty System) (AMPS) By-Law 333-2013, ஐத் திருத்தியுள்ளது:

- முதலாவது குற்றத்திற்கு: $125
- இரண்டாவது குற்றத்திற்கு: $250
- அடுத்து செய்யும் குற்றங்களுக்கு: $500

வாகனங்களைக் கட்டியிழுத்து செல்லுதலை மேம்படுத்தல்

தற்போது, பனி அகற்றுவதில் குறுக்கிடும் வாகனங்களை, சட்ட அமலாக்க அதிகாரிகள் விசாரணை செய்து, அபராத அறிவிப்புகளை வெளியிடுகின்றனர், மற்றும் அவசியமாகும் போது, விதிமீறலாக நிறுத்தப்படும் வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்ல ஏற்பாடு செய்கின்றனர். என்னவென்றால், பனி வாரி அகற்றும் நடவடிக்கைக்கு முன்னதாக சாலைகளை ஆய்வு செய்ய பணியாளர்களை நகரம் ஈடுபடுத்தும், அத்துடன் தேவைப்படும் போது, சட்டவிரோதமாக நிறுத்தப்பட்ட வாகனங்களை இழுத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யும்; இது, 2023-24 குளிர்காலத்திற்கான புதிய விஷயம் ஆகும். இது கட்டி இழுத்துச்செல்லும் அமலாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கேயாகும்.

**பிராம்ப்டன் நகரத்தினுள், பனி வாரி அகற்றும் இயந்திரம் இருக்குமிடம் தடம் தேடல்**

எந்தெந்த சாலைகள் மற்றும் பக்கவாட்டு நடைபாதைகளில் நகரின் பணியாளர்கள் பனி வாரி அகற்றியுள்ளார்கள் என இந்த வலைத்தளப் பக்கத்தில் காணலாம்; மற்றும் 311 மொபைல் செயலியிலும் காணலாம். இந்த வசதியைப் பயன்படுத்தி பனி அகற்றுதல் பராமரிப்புப் பணியின் முன்னேற்றம், எந்தச் சாலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது, மற்றும் தங்களுக்கு அருகாமையில் பனி வாரும் எந்திரம் இருக்கிறதா எனப் பார்த்து, தங்கள் வாகனம் இடைஞ்சலாக இருக்கும் பட்சத்தில் அவற்றை அகற்றிக் கொள்ள ஏதுவாகும். சேவைகளுக்கான கோரிக்கையையும் சமர்ப்பிக்கலாம்.

**விரைவுக் கூற்றுகள்**

ஒவ்வொரு வருடமும், கீழ்க்கண்டவாறு பனி அகற்றுதல் மற்றும் குளிர்காலப் பராமரிப்பினை நகர நிர்வாகம் செய்து வருகிறது:

- 4,120 கிலோமீட்டர்களுக்கு மேலான சாலை நீளம்,
- 1,015 கிலோமீட்டர்களுக்கு மேலாக நகர கட்டிடங்களை ஒட்டியுள்ள பக்க வாட்டு நடைபாதைகள்,
- 2,556 க்கும் அதிகமான போக்குவரத்து பேருந்து நிறுத்தங்கள்,
- 217 கிலோமீட்டர்களுக்கு மேலான பொழுதுபோக்கு வழித்தடங்கள்,
- 191 பள்ளிகளுக்கு சாலையைத் தாண்டிச்செல்ல வேண்டிய இடங்கள், மற்றும்
- 86 நகரின் வாகன நிறுத்த இடங்கள்.

குளிர்கால காலப் பருவநிலை நிகழ்வில், ஐந்து சென்டிமீட்டர் பனிப்பொழிவு இருக்கும் போது பணியாளர்கள் தெருக்களில் பனி வாருவதைத் தொடங்குகின்றனர். சாலைப் பாதுகாப்பை அதிகரிக்க அதிக அளவு வாகனப்

போக்குவரத்து நிகழும் முக்கிய சாலைகளை சுத்தம் செய்வதற்கே நகரம் முன்னுரிமை அளிக்கிறது; அதன் பின்னரே இதர உள்ளூர் சாலைகளில் பனி அகற்றுகிறது.

ஒரு அவசரநிலை எனும்போது, குறைந்தபட்சம் 72 மணிநேரம் தாக்குப்பிடிக்கும் வகையில் ஒரு பாதுகாப்புப் பெட்டியைத் தங்கள் வசம் வைத்திருந்து தங்களையோ அல்லது தங்கள் குடும்பத்தினரையோ, பராமரிக்கத் தயாராக இருக்குமாறு குடியிருப்பாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அர்ப்பணிப்புள்ள குழு ஒன்றுடன் நகர நிர்வாகம் விடாமுயற்சியுடன் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறது; இதில், பனித்துகளோ மற்றும் பனியோ இருக்கும்போது, தெருக்கள், நடைபாதைகள், போக்குவரத்து நிறுத்தங்கள், பொழுதுபோக்கு பாதைகள் மற்றும் பள்ளிக்காக கடந்து செல்லும் இடங்கள் முதலானவை எளிதில் அணுகக்கூடியதாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதை உறுதி செய்யும் வகையில் பிராம்ப்டன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

**லின்குகள்**

- பிராம்ப்டன் நகரம் (City of Brampton) | சாலைகள் மற்றும் போக்குவரத்து (Roads and Traffic) | பனி அகற்றும் இயக்க செயல்பாடுகள் (Snow Clearing Operations)

**அறிஞர் கூற்றுக்கள்**

“இந்த குளிர்காலத்தில் நமது நகரத்திற்குச் சொந்தமான சாலைகள், பாதைகள், கடக்கும்வழிகள், வாகனம் நிறுத்துமிடங்கள் மற்றும் பொழுதுபோக்கு நடைபாதைகளை பாதுகாப்பாகவும் அணுகக்கூடியதாகவும் வைத்திருக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்த, பிராம்ப்டன் நகர பணிக்குழு 24 மணி நேரமும் உழைத்து வருகிறது. அவசரகால மற்றும் போக்குவரத்து வாகனங்கள் உட்பட, இந்த சீசனில் நமது நமது நகரவாசிகள் தொடர்ந்து பாதுகாப்பாக நடமாடுவதை உறுதிசெய்ய, சீரிய சிந்தனைகொண்ட மற்றும் முழுமையான செவிசாய்ப்புத் திட்டத்தினை நாங்கள் கொண்டிருக்கிறோம். குளிர்காலத் தயார்நிலை என்பது ஒரு கூட்டு முயற்சி என்பதை நாங்கள் அறிவோம், அத்துடன் உங்கள் ஒத்துழைப்புடன், இந்த பருவத்தை அனைவருக்கும் பாதுகாப்பானதாக மாற்ற முடியும் எனவும் அறிவோம்”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், பிராம்ப்டன் நகரம்*

“எங்கள் குழுவின் பனி அகற்றும் முயற்சிகள் பிராம்ப்டன் நகரத்தின் மிகப்பெரிய இயக்க நடவடிக்கைகளில் ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும், அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் பாதுகாப்பான குளிர்காலத்தை உறுதிசெய்ய நாங்கள் மீண்டும் மீண்டும் கடமைப்பட்டுள்ளோம்; அதனால்தான் பனி அகற்றுவதில் உதவி செய்வதற்கான கூடுதல் அணுகல், மற்றும் பனி அகற்றும் போது தெருக்களில் கார்கள் நிறுத்தப்படாமல் இருக்க வலுவான முயற்சிகள், போன்ற மேம்பட்ட நடவடிக்கைகளை இந்த ஆண்டு அறிமுகப்படுத்துகிறோம். உங்களுக்கான பாதையை நாங்கள் சீராக்கும்போது, ஒவ்வொரு குடிமகனும் நடைபாதைகளில் பனி வாருதல், தெருக்களில் நிறுத்தப்பட்ட கார்களை அங்கிருந்து நகர்த்துதல், அக்கம்பக்கத்தினரையும் அப்படி செய்திருக்கிறார்களா என சோதித்தல் மற்றும் எச்சரிக்கையுடன் வாகனம் ஓட்டுதல் ஆகியவற்றில் தங்கள்

பங்கைச் செய்ய வேண்டும். நம்முடைய கூட்டு முயற்சிகள் மூலம்தான், அனைவருக்கும் பாதுகாப்பான பருவத்தை உறுதி செய்ய முடியும்."

- *பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 மற்றும் 5, தலைவர், பொதுப்பணிக்குழு, பிராம்ப்டன் நகரம்*

"எங்கள் அர்ப்பணிப்பு கொண்ட ஊழியர்கள் நகரத்தின் பிரம்மாண்டமான உள்கட்டமைப்பைப் பராமரிக்க அயராது உழைக்கிறார்கள்; அதில் எங்கள் சமூகத்தின் பாதுகாப்பு, மகிழ்ந்து அனுபவித்தல் மற்றும் அணுகும் தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதற்காக குளிர்கால வானிலை நிலைமைகளுக்கு செவிசாய்ப்பதும் உள்ளடங்குகிறது. இந்த குளிர்காலத்தில், நமது நகரத்தை சீராக இயங்க வைப்பதற்கும், குளிர்காலம் கொண்டு வரக்கூடிய சவால்களுக்கு எதிராக நமது குடியிருப்பாளர்கள் நன்கு பாதுகாக்கப்படுவதற்கும் பிராம்ப்டன் குழு தயாராக உள்ளது."

- *மார்லன் கல்லிடீன், தலைமை நிர்வாக அதிகாரி, பிராம்ப்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 90,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca